கல்லூரிக்கு எதிராக புகார்:

மாணவியை செமஸ்டர் தேர்வு எழுத அனுமதிக்க வேண்டும்!

சென்னை ஐகோர்ட்டு உத்தரவு!!

சென்னை, நவ.6

கூடுதல் கல்வி கட்டணம் வசூலித்ததாக கல்லூரிக்கு எதிராக புகார் அளித்த மாணவியை, தேர்வு எழுத அனுமதி மறுத்த விவகாரம், செமஸ்டர் தேர்வு எழுத அனுமதிக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை வேளச்சேரியில் உள்ள குருநானக் கல்லூரியில் அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுவதாக அக்கல்லூரி மாணவி லோக்கேஸ்வரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அதில், கடந்த 2022–ஆம் ஆண்டு இளங்கலை பொருளாதார பட்டப்படிப்பில் சேர்ந்து 2 ஆண்டுகளில் கல்வி கட்டணமாக 53, 825 ரூபாயை தன்னிடம் வசூலித்துள்ளதாகவும், இது அரசு நிர்ணயித்த கல்விக்கட்டணத்தை விட அதிகமாக இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

குருநானக் கல்லூரி நிர்வாகம் கடந்த 2022–2023 மற்றும் 2023–2024–ஆம் கல்வி ஆண்டில் மட்டும் சுமார் 2500 மாணவ – மாணவிகளிடம் இருந்து 15 கோடி ரூபாய் சட்டவிரோதமாக கல்வி கட்டணமாக வசூலித்திருப்பதாகவும் மனுவில் தெரிவித்துள்ளார்.

அரசு நிதியுதவியின் கீழ் செயல்படும் தனியார் கல்லூரிகளில் இளங்கலை பட்டப்படிப்பிற்கு கல்வி கட்டணம் செலுத்தில் இருந்து விலக்கு அளித்து தமிழக அரசின் உயர்கல்வி துறை கடந்த 2007 ம் ஆண்டு அரசாணை வெளியிட்டுள்ளது.

இந்த அரசாணையை மீறி, சென்னை வேளச்சேரியில் உள்ள குருநானக் கல்லூரி நிர்வாகம் கூடுதல் கட்டணத்தை வசூலித்திருப்பதாகவும், இது தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததால் கல்லூரி 3–ஆம் ஆண்டிற்கான பருவத் தேர்வை எழுத தன்னை அனுமதிக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

கல்லூரி நிர்வாகத்தை தொடர்ந்து வலியுறுத்தியும் தேர்வு எழுத அனுமதிக்காததால் மிகுந்த மன உளைச்சலுக்குள்ளாகி கடந்த அக்டோபர் 28–ஆம் தேதி எலி மருந்தை அருந்தி தற்கொலைக்கு முயன்று மருத்துவ சிகிச்சை பெற்றதாகவும் மனுவில் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ராஜகுரு ஆஜராகி மாணவர்களிடம் கூடுதல் கல்விக் கட்டணம் வசூலிக்க கூடாது என்றும் மாணவியை தேர்வு எழுத அனுமதிக்க உத்தரவிட வேண்டும் என்று வாதங்கள் வைத்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, பட்டு தேவானந்த், நவம்பர் 6–ஆம் தேதி முதல் 22–ஆம் தேதி வரை நடைப் பெறும் கல்லூரி செமஸ்டர் தேர்வை மாணவி லோக்கேஸ்வரி எழுத அனுமதிக்குமாறு வேளச்சேரி குருநானக் கல்லூரிக்கு இடைக்கால உத்தரவு பிறப்பித்து வழக்கினை தள்ளி வைத்தார்.

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடைபெற்ற 67வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று உரையாற்றியபோது எடுத்த படம்.

அமெரிக்க அதிபர் தேர்தல்:

கலிபோர்னியா மாகாணத்தை கைப்பற்றிய கமலா ஹாரீஸ்!

வாஷிங்டன், நவ. 6

அமெரிக்காவில் மொத்தமுள்ள 50 மாகாணங்களில் அதிகமான எலக்டோரல் காலேஜ் வாக்குகளைக் கொண்ட கலிபோர்னியா மாகாணத்தை ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கமலா ஹாரிஸ் கைப்பற்றியுள்ளார். இதன் மூலம் தேர்தல் முடிவுகள் தொடர்பான கள நிலவரத்தில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவில் மொத்தம் உள்ள 50 மாகாணங்களில் 538 எலக்டோரல் காலேஜ் வாக்குகள் உள்ளன. இதில் 270 வாக்குகளுக்கு மேல் வெற்றி பெறும் வேட்பாளரே அதிபராக பொறுப்பேற்பார். அதிகபட்சமாக கலிபோர்னியா மாகாணத்திற்கு 54 வாக்குகள் உள்ளன. அமெரிக்காவின் அரிசோனா, ஜார்ஜியா, மிச்சிகன், நெவாடா, பென்சில்வேனியா, விஸ்கான்சின், வடக்கு கரோலினா ஆகியவை ஸ்விங் மாகாணங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

ஏனென்றால் இந்த மாகாணங்களில் வெற்றி வாய்ப்பு யாருக்கு இருக்கும் என்பதை எளிதில் கணிக்க முடியாது.

எனவே, இந்த மாகாணங்களில் கமலா ஹாரிஸ், டொனால்ட் ட்ரம்ப் இடையில் கடும் போட்டி நிலவுகிறது. இந்நிலையில், இந்தியர்கள் அதிகம் வசிக்கும் கலிபோர்னியா மாகாணத்தில் கமலா ஹாரிஸ் தனது வெற்றியை பதிவு செய்துள்ளார். அமெரிக்காவின் முக்கிய மாகாணங்களில் ஒன்றான கலிபோர்னியா, அதிபர் வேட்பாளரை தேர்வு செய்யும் மாகாணமாக இதுவரை இருந்து வருகிறது.

இங்கு கமலா ஹாரிஸ் வெற்றி பெற்று இருப்பதால், முன்னிலையில் முன்னேற்றம் கண்டுள்ளார்.

அதே போல 28 வாக்குகள் கொண்ட நியூயார்க் மாகாணத்தையும் கமலா ஹாரிஸ் கைப்பற்றியுள்ளார்.

எனினும், 6 மாகாணங்களில் டிரம்ப் மற்றும் கமலா ஹாரிஸ் இடையே கடுமையான இழுபறி நீடிக்கிறது.

இதுவரை புளோரிடா, டெக்சாஸ், வடக்கு கரோலினா, ஓகியோ, இண்டியானா, மிசோரி உள்பட 24 மாகாணங்களில் டிரம்ப் வெற்றி பெற்றுள்ளார். இதன் மூலம் 230 எலக்டோரல் வாக்குகள் அவருக்கு கிடைத்துள்ளது.

அதேபோல, கலிபோர்னியா, நியூயார்க், மாசாசெட், வாஷிங்டன், மேரிலேண்ட், ஓரேகான், கோலர்டா உள்பட 15 மாகாணங்களில் கமலா ஹாரிஷ் வெற்றி பெற்றுள்ளார். கலிபோர்னியா மாகாணத்தை கமலா ஹாரிஸ் வென்றது மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்துள்ளது.

அதே நேரத்தில் இன்னும் மீதமுள்ள 14 மாகாணங்களில் பாதியை வென்றாலே டிரம்ப் எளிதில் வெற்றி பெற்றுவிடுவார் என்ற சூழல் காணப்படுகிறது. மொத்தம் 116 இடங்களுக்கு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. இதில், டிரம்ப் வெற்றி பெற இன்னும் 40 இடங்களும், கமலா ஹாரிஸ் வெற்றி பெற 78 இடங்களும் தேவைப்படுகின்றன.

இன்று நண்பகல் நிலவரப்படி டிரம்ப் 247 வாக்குகள் பெற்று முன்னிலையில் உள்ளார். கமலா ஹாரிஸ் 214 வாக்குகள் பெற்று சற்றே பின் தங்கியுள்ளார். டிரம்ப் 51.2 சதவீத வாக்குகளும், கமலா 47.4 சதவீத வாக்குகளும் பெற்றுள்ளனர்.

கடந்த தேர்தலில் ஜோ பைடன் 64 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு அணையிலிருந்து பெருங்கால் பாசன பிசான பருவ சாகுபடிக்கு நெல்லை கலெக்டர் கார்த்திகேயன், தண்ணீர் திறந்து வைத்தார். அருகில் சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின், யூனியன் தலைவர் பரணிசேகர், உதவி இயக்குநர் வில்லியம் ஜேசுதாஸ், செயற்பொறியாளர் மதனசுதாகரன் ஆகியோர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று கோவை காந்திரபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பகுதியில் 45 ஏக்கர் பரப்பளவில் ரூ.167.25 கோடியில் அமைக்கப்படும் செம்மொழிப்பூங்கா கட்டுமானப்பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் அமைச்சர்கள் உள்ளனர்.

மக்களை ஏமாற்றி வருவதால்

தி.மு.க.வுக்கு எதிராக அதிருப்தி அலை உருவாகியுள்ளது!

டி.ஜெயக்குமார் பேட்டி!!

சென்னை, நவ. 06

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில், அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், இன்று மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது கூறியதாவது:

வரவிருக்கும் தேர்தல்களில் களப்பணிகளை எப்படி எல்லாம் மேற்கொள்வது என்று இந்த ஆலோசனை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

விலைவாசி உயர்வு. நிறைவேற்றாத தேர்தல் வாக்குறுதிகள், ஆளும்கட்சியின் மக்கள் விரோத போக்கு, நீட் விவகாரத்தில் திமுக மக்களை ஏமாற்றியது போன்ற செயல்களால் திமுகவினர் மீது மக்களிடையே அதிருப்தி எழுந்துள்ளது இதன் தீவிரத்தை மக்களிடையே கொண்டு செல்ல வேண்டும் என்பது குறித்தும் இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

கூட்டணி முடிவு செய்வதற்கான உரிய தருணம் இது இல்லை. ஆகையால் இது குறித்து ஆலோசிக்கப்படவில்லை. திமுக கூட்டணித்தேர்தல் எப்படி இருக்கும் என்பதை கடந்த கால தேர்தல்களை வைத்து புரிந்து கொள்ளலாம். ஒரு ஆட்சி சரியில்லை, கட்சி சரியில்லை என்றால் விமர்சனம் தான் வரும். அதிமுக சரியாக இருப்பதால் விஜய் விமர்சிக்கவில்லை.

தலித்துகளுக்கு பாதுகாப்பான சூழல் தமிழ்நாட்டில் இல்லை. ஸ்மார்ட் சிட்டி அதிமுக ஆட்சியில் துவங்கப்பட்டது. தந்தை புகழ் பாடும் ஆட்சியாகவே தமிழ்நாட்டில் திமுக ஆட்சி நடைபெற்று வருகிறது. 2026– இல் திமுக ஒழிந்து விடும்.

விஜய் கட்சி துவங்கியது குறித்து நாங்கள் ஆலோசிப்பதற்கான அவசியம் இல்லை

தமிழ் தேசியம் தமிழ் மக்களின் அடையாளம். திராவிடம் எங்களின் ஐடியாலஜி. திராவிடம் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை குரல். தமிழையும் திராவிடத்தையும் பிரிக்க முடியாது. நாம் தமிழர் கட்சி சீமான் சட்ட வல்லுனர்களுடன் ஆலோசித்து புரிந்து கொண்டு பேச வேண்டும். நாம் தமிழர் கட்சி சீமான் சேற்றை வாரி இறைக்கும் செயலில் ஈடுபட வேண்டாம்

ஜெயலலிதாவை அழித்தால் அதிமுக அழியும் என்பது கருணாநிதியின் எண்ணம்.

கருணாநிதி அப்பாவே வந்தாலும் அதிமுக வை அழிக்க முடியாது. ஜெயலலிதா சொத்துக்குவிப்பு வழக்கில் மேல் முறையீடு செல்லும் முன் விடுதலை பெற்றார். அதன் தீர்ப்பு வரும் முன் மறைந்து விட்டார். எனவே அவர் விடுதலை பெற்றவர் என்பதை சீமான் சட்டம் தெரிந்தவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்.

செந்தில் பாலாஜி கம்பேக் கொடுத்ததாக முதல்வர் சொல்வது கேவலமானது. தவறானவர் என சொன்ன செந்தில் பாலாஜியை இப்படி சொல்வது கேடுகெட்டத் தனமானது. செந்தில் பாலாஜி உங்களை எப்படி கவனிக்கிறார் என எங்களுக்கு தெரியும். இவ்வாறு அவர் கூறினார்.

எதிர்க்கட்சியினர் மூழ்கட்டும்:

அமெரிக்காவை கட்டமைக்க டிரம்புக்கு இனி தடையில்லை!

எலான் மஸ்க் உற்சாகம்!!

வாஷிங்டன், நவ 6

அமெரிக்காவை வளர்ச்சிப் பாதையை நோக்கி கட்டமைக்க டிரம்புக்கு இனி தடைகள் ஏதுமில்லை, எதிர்கட்சியினர் தோல்வியில் மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று டிரம்பின் ஆதரவாளரும், உலகப் பணக்காரருமான எலான் மஸ்க் கூறியுள்ளார்.

உலகின் பெரும் பொருளாதார நாடாக விளங்கும் அமெரிக்காவின் அடுத்த அதிபராக டொனால்டு டிரம்ப் தேர்வு செய்யப்படுவது ஏறத்தாழ உறுதியாகியுள்ளது. வாக்கு எண்ணிக்கை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. முன்னதாக, ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கமலா ஹாரிஸுக்கு ஆதரவாக பிரபல பாப் இசைக் கலைஞர் டெய்லர்ஸ்விப்ட், நடிகர் ஜார்ஜ் க்ளூனி, பாப் கலைஞர் எமினெம் உள்ளிட்ட ஏராளமான கலைஞர்கள் பிரசாரம் செய்தனர். பில்கேட்ஸ் கமலாவின் பிரசாரத்திற்காக பெரும் தொகையை நன்கொடை அளித்தார். ஆனால், டிரம்புக்கு பெரும்பாலான பிரபலங்கள் யாரும் ஆதரவு கொடுக்கவில்லை. ஆனால், தொடக்கம் முதலே டிரம்புக்கு மிகப்பெரிய பலமாக இருப்பவர் உலகின் பெரும் பணக்காரரும், ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனருமான எலான் மஸ்க். டிரம்புக்கு வெளிப்படையாக ஆதரவு கொடுத்த அவர், கமலா ஹாரிஸை கிண்டல் செய்து தொடர்ந்து தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு வந்தார். இந்த தேர்தலில் டிரம்ப் வெற்றி பெறாவிட்டால், அதுதான் அமெரிக்காவில் நடக்கும் கடைசி தேர்தலாக இருக்கும் என்று கூறி மக்களிடையே அச்ச உணர்வை எலான் மஸ்க் ஏற்படுத்தினார்.

கடந்த 2016 மற்றும் 2020 ஆம் ஆண்டு தேர்தல்களில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களான ஹிலாரி கிளிண்டன் மற்றும் ஜோபைடனை ஆதரித்த எலான் மஸ்க், திடீரென தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு டிரம்புக்காக தீவிரமாக பிரசாரம் செய்தார். டிரம்ப் அதிபரானால் மிகப்பெரியவரிக் குறைப்பு ஆதாயங்களை எலான் மஸ்க் பெறுவார் என்று கூறப்படுகிறது. டிரம்ப் ஆட்சியைப் பிடித்தால் அமைச்சர் பதவி ஏற்கக் கூட தயாராக இருப்பதாக அவர் கூறியிருந்தார். பைடன் அரசு, விண்வெளி ஆய்வு விவகாரத்தில் கடுமையான சட்டங்களை விதித்ததால் அதிருப்தி அடைந்த எலான் மஸ்க், டிரம்புக்கு ஆதரவாக இருந்து அவரை வெற்றி பெறச் செய்துள்ளார் என்று கூறப்படுகிறது. இந்நிலையில் டிரம்ப் வெற்றியை கொண்டாடும் விதமாக எலான் மஸ்க் தனது டுவிட்டர் எக்ஸ் தளத்தில், கைகழுவும் தொட்டியை (சின்க்) தூக்கிக் கொண்டு ஓடுவது போல ஒரு புகைப்படத்தை பதிவிட்டுள்ளார். ஆங்கிலத்தில் சின்க் என்றால் மூழ்குவது என்ற பொருளும் உண்டு. எதிர்கட்சிகளின் வீழ்ச்சியை குறிப்பிட்டுள்ள எலான் மஸ்க், இனி வளர்ச்சியை நோக்கி அமெரிக்காவை கட்டமைக்க டிரம்புக்கு எந்த தடையும் இருக்காது என்று கூறியுள்ளார்.

இந்தியா, அமெரிக்கா உறவுகள் வளரும்!

வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தகவல்!!

புதுடில்லி, நவ.6

இந்தியா, அமெரிக்கா உறவுகள் வளரும் என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய் சங்கர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான ஓட்டுப் பதிவு முடிவடைந்த நிலையில் டொனால்டு டிரம்ப் தொடர்ந்து முன்னிலை வகித்த நிலையில் அவர் மீண்டும் அதிபர் ஆகிறார்.

இந்தநிலையில் அமெரிக்க தேர்தல் குறித்து, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய் சங்கர் கூறியதாவது,

அமெரிக்காவுடனான உறவில் இந்தியா நிலையான முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்தியா, அமெரிக்கா உறவுகள் வளரும். அமெரிக்கத் தேர்தலைப் பார்க்கும் போது, தீர்ப்பு எதுவாக இருந்தாலும் உறவு தொடர்ந்து வளரும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம்.

டிரம்ப் அதிபராக இருந்தபோது, உறவுகள் புத்துயிர் பெற்றது என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

கேரள ரெயில் விபத்தில் இறந்த தமிழக தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்!

மத்திய அரசுக்கு பினராயி விஜயன் வலியுறுத்தல்!!

திருவனந்தபுரம், நவ.6

கேரளத்தில் ரெயில் மோதி உயிரிழந்த தமிழ் நாட்டைச் சேர்ந்த 4 தூய்மைப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணத்தை வழங்குமாறு மத்திய அரசுக்கு அந்த மாநில முதல்வர் பினராயி விஜயன் வலியுறுத்தினார்.

கேரளத்தில் உள்ள ஷோரனூர் ரெயில் நிலையம் அருகே திருவனந்தபுரம் நோக்கி சென்ற விரைவு ரெயில் மோதியதில் தமிழகத்தைச் சேர்ந்த 2 பெண்கள் உள்பட 4 தூய்மைப் பணியாளர்கள் உயிரிழந்தனர். இந்த விபத்து குறித்து மத்திய ரெயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவுக்கு பினராயி விஜயன் எழுதிய கடிதத்தில், கூறியுள்ளதாவது,

'ஷோரனூர் ரெயில் நிலையம் அருகே ஏற்பட்டவிபத்தில் 4 பேர் உயிரிழந்த சம்பவம் மிகவும் கவலையளிக்கிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பும் இதுபோன்ற விபத்தில் ஒப்பந்ததூய்மை பணியாளர் ஒருவர் உயிரிழந்தார் தண்டவாளங்களில் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு உரிய பயிற்சி ஏதும் வழங்கப்படவில்லை.

பணியாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தை இது போன்ற விபத்து சம்பவங்கள் உணர்த்துகின்றன. எனவே, ஒப்பந்த தூய்மைப் பணியாளர்களின் பாதுகாப்புக்கான வழிகாட்டு நெறிமுறைகளை உடனடியாக வெளியிட்டு உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணத் தொகையை வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

சிறைக்கைதி தாக்கப்பட்ட விவகாரம் :

11 சிறைக்காவலர்கள் சஸ்பெண்ட்!

வேலூர், நவ.6

வேலூரில் சிறைக்கைதி தாக்கப்பட்ட சம்பவத்தில் சிறைக்காவலர்கள் 11 பேரை சஸ்பெண்ட் செய்து ஏ.டி.ஜி.பி., மகேஸ்வர்தயாளன் உத்தரவு பிறப்பித்துள்ளார். வேலூர் சிறையில் சிவக்குமார் என்பவர் ஆயுள் கைதியாக இருக்கிறார். இவரை சிறைத்துறை டி.ஐ.ஜி. வீட்டு வேலைக்கு அழைத்து சென்றிருந்தாராம். அப்போது பணம், நகையை சிவக்குமார் திருடி விட்டதாக கூறி, அவரை சிறைக் காவலர்கள் அடித்து துன்புறுத்தியாக புகார்கள் எழுந்தது. இந்த விவகாரத்தில் மகனின் நிலையை அறிய விரும்பிய அவரது தாயார் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு வழக்கை தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய வேலூர் தலைமை மாஜிஸ்திரேட்டுக்கு உத்தரவு பிறப்பித்தது.

இதையடுத்து வேலூர் தலைமை மாஜிஸ்திரேட் விசாரித்து தாக்கல் செய்த அறிக்கையின் அடிப்படையில், வேலூர் சிறை அதிகாரிகள் மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட்டது. அதன்படி சிறைத்துறை டி.ஐ.ஜி. ராஜலட்சுமி, கூடுதல் கண்காணிப்பாளர் அப்துல் ரகுமான், ஜெயிலர் அருள்குமரன் உள்பட 14 பேர் மீது சி.பி.சி.ஐ.டி. போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இதற்கிடையில், எழும்பூரில் உள்ள சிறைத்துறை தலைமை அலுவலகத்தில் வைத்து டி.ஐ.ஜி. ராஜலட்சுமியிடம், சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை நடத்தினர்.

விசாரணையை தொடர்ந்து வேலூர் சிறைத்துறை டி.ஐ.ஜி, ராஜலட்சுமி, கூடுதல் கண்காணிப்பாளர் அப்துல் ரகுமான், ஜெயிலர் அருள்குமரன் ஆகிய 3 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். இந்த நிலையில் மேலும் சிறைக்காவலர்கள் 11 பேரை சஸ்பெண்ட் செய்து ஏ.டி.ஜி.பி., மகேஸ்வர்தயாளன் உத்தரவு.பிறப்பித்துள்ளார்.

ரூ.34-க்கு பாரத் பிராண்ட் அரிசி, ரூ.30-க்கு கோதுமை மாவு விற்பனை!

2–ம் கட்டமாக தொடக்கம்!!

புதுடெல்லி, நவ.6

விலை உயர்வை கட்டுப்படுத்தவும், மக்களுக்கு நிவாரணம் கிடைக்கும் நோக்கத்துடன் பாரத் என்ற பெயரில், அரிசி மற்றும் கோதுமை மாவு விற்கும் திட்டத்தின் இரண்டாம்கட்ட விற்பனை துவங்கியது.

அதிக விலையின் பாதிப்பில் இருந்து நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் மானிய விலையில்

கோதுமை மாவு கிலோ ஒன்றுக்கு 30 ரூபாய்க்கும், அரிசி 5 கிலோ மற்றும் 10 கிலோ பாக்கெட்டுகளில் கிலோ ஒன்றுக்கு 34 ரூபாய்க்கும் விற்கப்படும். முதல் கட்ட விலையான ரூ.27.50 மற்றும் ரூ.29ல் இருந்து கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் என அரசு அறிவித்து இருந்தது.

அதன்படி கடந்த, 2023 அக்டோபரிலிருந்து இந்த ஆண்டு ஜூன், 30ம் தேதி வரை, பாரத் என்ற பெயரில் அரிசி மற்றும் கோதுமை மாவை மத்திய அரசு விற்பனை செய்தது.கூட்டுறவு சங்கங்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் வாயிலாக இவை நாடு முழுவதும் விற்கப்பட்டன. அப்போது, 15.20 லட்சம் டன் கோதுமை மாவு, 14.58 லட்சம் டன் அரிசி விற்கப்பட்டன.

இதற்காக, 3.69 லட்சம் டன் கோதுமை மற்றும் 2.91 லட்சம் டன் அரிசி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், தேவைப்பட்டாலும், ஒதுக்கீடு அளவு உயர்த்தப்படும் என்று அமைச்சர் பிரகலாத் ஜோஷி தெரிவித்தார்.

VTM விலைவு

பதிவு அலுவலகம்: சூலக்கரை, விருதுநகர்.
CIN : L17111TN1946PLC003270
இணையதளம் : www.vtmill.com தொலைபேசி : 0452-2482595

அறிவிப்பு

செபி (SEBI) நிபந்தனைகள் 2015ம் (பட்டியலிடும் தேவைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்)நிபந்தனைகள் 29 மற்றும் 47 க்கு இணங்க இக்கம்பெனியின் இயக்குநர்கள் கூட்டம் 11.11.2024, திங்கட்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கு நடைபெறும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. இந்தக் கூட்டம் 30.09.2024 அன்று முடிவடைந்த காலாண்டு தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து அங்கீகரிப்பதற்காகக் கூட்டப்படுகிறது. இந்த அறிவிப்பு, பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணையதளம் www.bseindia.com இல் உள்ளது.

இடம்: சூலக்கரை, விருதுநகர்.
நாள்: 04.11.2024

VTM லிமிடெட்டிற்காக.
கா.பிரியதர்ஷினி
கம்பெனி செயலாளர்

தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை
கட்டடம் (க&ப) வட்டம், சேப்பாக்கம், சென்னை–5

குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்: 28 கட்ட (க& ப) வட்டம் /2024-2025/நாள். 04.11.2024.
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை : மொத்த வகை / இன விலை முறை

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை கட்ட (க(ம)ப) வட்டம், சென்னை-5 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்காக குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

வ. எண்	பணியின் பெயர் மற்றும் முன்வைப்புத் தொகை	பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை	காலம்	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் தகுந்த வகுப்பு
1.	சென்னை 05, காமராஜர் சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவக வளாகத்தில் திராவிட இயக்க தீரர்கள் கோட்டக் கட்டடம் கட்டும் பணி. (மு.வை.தொகை: ரூ.99,200/-	ரூ.178.34 இலட்சங்கள்	6 மாதங்கள்	வகுப்பு IV மற்றும் அதற்குமேல்

1. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 19.11.2024 மாலை 03.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 19.11.2024 மாலை 04.00 மணி.

செ.ம.தொ.இ./4737/ஒப்பந்தப்புள்ளி/2024

கண்காணிப்புப் பொறியாளர், பொபது..
கட்ட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்,
சேப்பாக்கம், சென்னை-5.